2008 ஏப்ரல் 30]

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் வட்டத் தலைமை மருத்துவமனையிலே சிறப்பு மருத்துவர்கள் யாரும் இல்லை. அந்தப் பகுதியிலே திருக்கழுக்குன்றம் வட்டம், திருப்போரூர் பகுதி, செய்யூர் பகுதியிலேயிருந்து ஏராளமான நோயாளிகள், புற நோயாளிகள் வருகிறார்கள். எனவே, அந்தப் பகுதியிலே கண் சிறப்பு மருத்துவர்களை நியமிப்பதற்கு அரசு முன்வருமா என்று கேட்டு, அதேபோன்று, செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே புதிதாகக் கண் வங்கியை அமைப்பதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண் மருத்துவமனை, அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் இருக்கின்றன. அதேபோல, 54 அரசு மருத்துவமனைகளிலும் கண் மருத்துவச் சிகிச்சை மையங்கள் இருக்கின்றன. மேலும், தனியார் தொண்டு நிறுவனங்கள் இதில் அதிகமாக ஆர்வம் எடுத்துக்கொண்டு, அவர்கள் சிசிச்சை அளிக்கிற காரணத்தால், அந்த மருத்துவமனைக்குக் கூடுதலாகத் தேவை இருக்காது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 185, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

185—

தொழிற்பேட்டை

***33820—திரு. த. தியோடர் ரெஜினால்டு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மநாபபுரம் தொகுதி, கப்பியறை பேரூராட்சியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2008 ஏப்ரல் 30

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் ஒன்றியத்தில் புதிதாகத் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.

திரு. த. தியோடர் ரெஜினால்டு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டம் சிறிய மாவட்டம். படித்தவர்கள் நிறைந்த மாவட்டம். ஆனால், தொழிற்சாலைகள் எதுவுமே இல்லாத மாவட்டம். குறிப்பாக, மேற்குப் பகுதியில் கல்குளம், விளவங்கோடு தாலுகாக்களில் அதிகமானவர்கள் படித்து வேலையில்லாமல் இருக்கிறார்கள். மாவட்டத்தின் மத்தியப் பகுதியான என்னுடைய தொகுதியில் உள்ள கப்பியறை பகுதியிலே அரசுப் புறம்போக்கு நிலங்கள் ஏராளமாக உள்ளன. எனவே, படித்து வேலையில்லாத இளைஞர்கள் பயன்பெறுகின்ற வகையில், தாய் உள்ளம் கொண்ட நம்முடைய தலைவர் கலைஞருடைய அரசு, அங்குப் புதிய தொழிற்பேட்டை அமைக்க முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கோணம் மற்றும் மார்த்தாண்டம் ஆகிய இரண்டு இடங்களில் "சிட்கோ" மூலம் தொழிற்பேட்டைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், தொழிற்பேட்டை வேண்டுமென்று சொன்னால், தொழில் தொடங்க ஆர்வம் உள்ள இருபது தொழில் முனைவோர்கள், தகுந்த தொழில் திட்டங்கள் மற்றும் போதுமான நிதி ஆதாரங்கள் ஆகியவற்றுடன் திருப்பித் தரப்படாத ஒப்பளிப்புத் தொகையினை D.D. மூலம் கட்ட முன்வந்தால், புதிதாகத் தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு, மாவட்ட ஆட்சியர், பொது மேலாளர் (மாவட்டத் தொழில் மையம்) மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியோருடன்

2008 ஏப்ரல் 30]

கலந்தாலோசித்து, கருத்தாய்வு செய்து, மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.

திரு. த. தியோடர் ரெஜினால்டு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்திலாவது விதிகளைத் தளர்த்தி, அங்குத் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மூலம் இல்லாவிட்டாலும்கூட, 'சிட்கோ' நிறுவனம்மூலம் தொழிற்பேட்டைகள் உருவாக்கப்படுவது ஒருபுறம் இருக்க, தனியார்களும் தொழிற்பேட்டைகளை உருவாக்குவதை ஊக்குவிக்கும்முகமாக, இந்த அரசு, சென்னை நகரின் மையப் பகுதியிலிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால், 50 ஏக்கர் மற்றும் அதற்கு அதிகமான பரப்பில், தனியார் தொழிற்பேட்டை அமைவதற்கான அடிப்படைக் கட்டுமானச் செலவில், 20 விழுக்காடு, அதிகபட்சம் ஒரு கோடி ரூபாய் வரை, அடிப்படைக் கட்டமைப்பு மானியம் வழங்கப்படும் என நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், கடந்த 22-2-2008-ல் வெளியிட்ட சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்கொள்கையில் அறிவித்திருக்கின்றார்கள். ஆகவே அந்த வாய்ப்பையும் தனியார் பயன்படுத்திக்கொள்ளலாம்.

முற்பகல் 10-10

மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த செண்பகராயன்புதூர் கிராமத்தில் 250 ஏக்கர் நிலப் பரப்பில் இரப்பர் பூங்கா அமைக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு, முதற்கட்டமாக 150 ஏக்கர் நிலம் இப்போது கையகப்படுத்தப்பட்டு, Tamil Nadu Industrial Park for Rubber என்ற தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான TIDCO மற்றும் தனியார் கூட்டமைப்பின்மூலம் பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, 150 ஏக்கரில் இரப்பர், இரப்பர் சார்ந்த பொருட்கள் தயாரிப்புக்கென ஒட்டுமொத்த இரப்பர் பால் பதப்படுத்தும் நிறுவனம், பொது மாசுக்

கட்டுப்பாட்டுச் சாதனங்கள் போன்ற வசதிகளுடன் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பதற்கென முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் அதற்கான அனுமதி, வரும் செப்டம்பர் 2008-ல் கிடைக்கவுள்ளது என்ற நல்ல செய்தியையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 186, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி, மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

186—

கட்டட வசதி

***14585—திரு. வே. செந்தில் பாலாஜி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தொகுதி, கரூர் கிளைச் சிறைச்சாலையினைப் புதிய இடத்திற்கு மாற்றிடவும், புதிய கட்டடம் கட்டவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரூர் தொகுதி, கரூர் கிளைச் சிறை தற்பொழுது அமைந்துள்ள இடம், சிறைவாசிகளை நீதிமன்றம் மற்றும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வசதியாக உள்ளதாலும், சிறைவாசிகளின் உறவினர்கள் நேர்காணல் செய்திட வசதியாக உள்ளதாலும், இக்கிளைச் சிறையினை வேறு இடத்திற்கு மாற்றிடவோ, புதிய கட்டடம் கட்டவோ அவசியம் தற்போது எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் கிளைச் சிறைச்சாலை, 19-10-1983 ஆம் ஆண்டுமுதல் திருச்சி மத்தியச் சிறைச்சாலையினுடைய கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றது. 54 பேர் இருக்கக்கூடிய கரூர் கிளைச் சிறைச்சாலையில்,